**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.161 /2022**

2023 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 25–ம் நாள் வெள்ளிகிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு T. சோழவேந்தன் B.A.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 25.08.2023 | தந்தை/கணவர் பெயர்: | சாரங்கபாணி |
| பெயர்: | ராமன் (PW-1 Chief ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | சிதம்பரநாதபுரம் | சமயம்: | |
| சாதி: | | வயது : | 82 /2023 |
| தொழில்: | | | |

**<u>முதல் விசாரணை : 25.08.2023.</u>**

நான் இவ்வழக்கின் வாதியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

23.07.1999–ல் தாவா சொத்தை பொறுத்து எனது பெயரில் ஏற்பட்ட கிரய பத்திரத்தின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.1. ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 11.12.2013–ல் தாவா சொத்தை பொறுத்து எனக்கு வழங்கப்பட்ட பட்டா மாறுதல் உத்தரவின் உண்மைநகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.2. ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 08.06.2022 தேதியிட்ட தாவா சொத்திற்கு எனது பெயரில் உள்ள வீட்டு வரி ரசீதின் அசலை

தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.3. ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 08.06.2022 தேதியிட்ட தாவா சொத்தில் மற்றொரு வீட்டிற்கு எனது மகன் சேகர் பெயரில் வீட்டு வரி செலுத்தியதற்கான ரசீதின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.4. ஆக குறியீடு செய்யப்படுகிறது.** (பிரதிவாதி தரப்பில் ஆட்சேபனையின் பேரில் குறியீடு செய்யப்படுகிறது.) 04.04.2022–ல் தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு எனது பெயரில் மின்கட்டணம் செலுத்தியதற்கான ரசீதின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.5. ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 02.06.2022–ல் தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு எனது பெயரில் மின்கட்டணம் செலுத்தியதற்கான ரசீதின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.6. ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.